| | | | |
|---|---|---|---|
| Headline | TNB Deepavali gifts to 200 children orphaned | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 26 Nov 2013 | Language | Tamil |
| Circulation | 60,000 | Readership | 252,000 |
| Section | News | Page No | 14 |
| ArticleSize | 908 cm² | Journalist | N/A |
| PR Value | RM 14,528 | | |
| | | | |









# ஆதரவற்ற குழந்தைகளுக்கு டிஎன்பி அன்பளிப்பு

(தி.க.காளிதாசன் - எஸ்.வெங்கடேஷ்)

கோலாலம்பூர்,நவ.26- தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு தெனகா நேஷனல் பெர்ஹாட்டின் தீபாவளி திறந்த இல்ல உபசரிப்பில் 200 குழந்தைகளுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது.

நேற்று மதியம் 1 மணிக்கு தெனகா நேஷனல் பெர்ஹாட்டின் தலைமையேகத்தில் நடைபெற்ற இந்நிகழ் வில் 5 ஆதரவற்ற குழந்தைக்ள் இல்லத்திற்கும் தலா வெ.2,000 அன்பளிப்பாக வழங்கியது.



'தான் பெற்ற இன்பம் வையகத்தாரும் பெற்று மகிழ வேண்டும்' எனும் முன்னோர்களின் அமுத மொழிக்கேற்ப பண்டிகை காலங்களில் குடும்பத்தோடு சேர்ந்து கொண்டாடுவதைக் காட்டிலும் வறுமை நிலையில் உள்ளவர்களோடு சேர்ந்து கொண்டாடுவதே சாலச் சிறந்ததாகும். அந்த வகையில் தெனகா நேஷனல் பெர்ஹாட்டின் இந்நிகழ்வு பாராட்டத்தக்கது. மூவின மக்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இந்தியர்களின் கலாச்சார நடனங்களும் பாடல்களும் அங்கம் பெற்றன. தெனகா நேஷனல் பெர்ஹாட்டின் ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். இந்தியர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு இருந்தது. மண்டபத்திற்கு வரும் பாதையிலும் மண்டபத்திற்கு உள்ளேவும் மாவிலை தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. கோலங்களும் வண்ண விளக்குகளும் தீபாவளி பண்டிகையின் நோக்கத்தை எடுத்துணர்த்தியது. இந்நிகழ்வில் தெனகா நேஷனல் பெர்ஹாட்டின் தலைமை நிர்வாகி டான்ஸ்ரீ லியோ மோகி, தலைமை அதிகாரி டத்தோஸ்ரீ அஸ்மான் முகமட், எரிசக்தி, பசுமைத் தொழில் நுட்பம், குடி நீர்துறைத் துணையமைச்சர் டத்தோஸ்ரீ மகாட்ஸிட் பின் காலிட், இயக்குநர் வாரிய உறுப்பினர் டான்ஸ்ரீ ஹரி நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



Powered by: iSENTIA